إدارة انوار الصفة لمكاتب الدينية – تامل نادو
அன்வாருஸ் ஸுஃப்பா தீனியாத் மக்தப் வழிகாட்டி
ANWARUS SUFFA DEENIYAT MAKTHAB GUIDANCE.
10/1-B, Aanaikar Complex, M.V. Badran Street, Periamet, Chennai – 600 003.

# புதிய மக்தப் ஆரம்பிக்கும் முறை

படிவம் எண் : 01

**முதல் கட்ட உழைப்பு :**

1. தீனியாத் மக்தப் பற்றிய அறிமுகம் மற்றும் தர்கீப் செய்து ஆர்வமூட்டுதல்.
2. முறைப்படுத்தப்பட்ட முன்மாதிரி மக்தபை பார்வையிடச் செய்தல்.
3. முறைப்படுத்தப்பட்ட மக்தப் ஆரம்பிக்கப்படும் மஸ்ஜித் / தனி இடங்களிலிருந்து லெட்டர்பேட் மூலம் தங்களது சென்டருக்கு வேண்டுகோள் படிவம் பூர்த்தி செய்து அனுப்புதல்.
4. மக்தப் மேம்பாட்டுக் குழு அமைத்து ஆசிரியர் மற்றும் மக்தப் மேம்பாட்டுக் குழு பொறுப்பாளர்களை மக்தப் விளக்க முகாமிற்கு அனுப்பி வைத்தல்.

**இரண்டாம் கட்ட உழைப்பு :**

1. தொடர்ந்து மூன்று ஜும்ஆக்களில் பயான் செய்தல். ( சென்டர் முஆவின் ஒன்றோ அல்லது இரண்டு பயான் செய்தல்.
2. பெற்றோர் கூட்டம் வைத்து முறைப்படுத்தப்பட்ட மக்தபின் அவசியங்களைப் பற்றி ஆர்வமூட்டுதல். ( குறிப்பாக தீனியாத் பாடத்திட்டத்தை அறிமுகம் செய்தல் )
3. நோட்டீஸ், பேனர், மஹல்லாவில் முழுமையாக கணக்கெடுப்பு செய்தல் மற்றும் மக்தப் பதிவு படிவத்தை பூர்த்தி செய்தல்.
4. (அட்மிஷன் பாரம் ) நுழைவுப் படிவம் தயார் செய்தல்.
5. 3 வது ஜும்ஆ முடிந்தபின் பிள்ளைகள் மற்றும் பெரியவர்களுக்கான அட்மிஷன் தேதியை முடிவு செய்து அட்மிஷனுக்கான நேரத்தையும் அறிவிப்பு செய்தல்.
6. அட்மிஷன் ஆரம்பம் மற்றும் அட்மிஷன் முடியும் தேதியை முடிவு செய்தல்.
7. சீருடை- யூனிபாரம், கிதாப், பேக் மற்றும் மக்தபுக்கு தேவையான பொருட்களை இருப்பு வைத்தல்.
8. மக்தப் ஆரம்பிக்கும் தேதியை முடிவு செய்தல்.
9. ஆசிரியர்களின் ஹத்யாவை முடிவு செய்தல். ( 12 மாத ஹத்யா ஒரு மாத போனஸ் )
10. மக்தப் ஆரம்பித்து ஒரு வாரம் அல்லது இரண்டாவது வாரத்தில் பெற்றோர் கூட்டம் வைத்து பெற்றோர் பொறுப்புகள் மற்றும் மாணவர்கள் கடைபிடிக்க வேண்டியவைகளை தெளிவுபடுத்துதல்.

**மூன்றாம் கட்ட உழைப்பு :**

மக்தப் துவங்கிய ஆரம்ப நாட்களில் குறைந்த பட்சம் மூன்று நாட்கள் தொடர்படியாக இருந்து புதிய மக்தபை தர்தீப் செய்தல்.

**முதல் நாள் :**

வகுப்புகளை வயது மற்றும் கல்வியின் அடிப்படையில் பிரித்தல். மேலும் கிதாபில் உள்ள தலைப்புகளை மாணவர்களுக்கு விளக்குதல்.

**இரண்டாம் நாள் :**

மாணவர்களுக்கு முஆவின் 1:00 மணி நேரத்தில் முழுமையாக பாடத்தை கற்பித்து காட்டுதல்.

**மூன்றாம் நாள் :**

ஆசிரியர் கற்பிப்பதை பார்வையிட்டு தர்தீப் செய்து முறைப்படுத்துதல். மேலும் வாராந்திர ஆலோசனையையும் செயல்படுத்தி காட்டுதல்.

**குறிப்பு :**

ஒரு பகுதி முடிந்து நிறைவு பெற்ற பிறகே அடுத்த கட்ட உழைப்பை ஆரம்பிக்க வேண்டும். ஒரு கட்ட உழைப்பு நிறைவாகாத வரை அடுத்த கட்ட உழைப்பு ஆரம்பிக்க கூடாது.